# சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும்
# 2015








# மூலிகைக் கையேடு

## சுதேச மருத்துவத் திணைக்களம்
## வடமாகாணம்

# கல்மடுநகர் மூலிகை கிராம வரைபடம்




15
14
6
7
13
12
5
10
11
3

## வரைபட விளக்கம்

1. பிரதான நுழைவாயில்
2. காவலாளி அறை
3. மாதிரி மூலிகைத் தோட்டம்
4. அகத்தியர் பீடம்
5. வீட்டுத் தோட்ட வீடு
6. அலுவலகம்
7. களஞ்சிய அறை (கராஜ்)
8. கிணறு
9. நீர்தாங்கியும் கிணறும்
10. நிழல் வீடு
11. தோடைத் தோட்டம்
12. மாதுளை, சந்தனத் தோட்டம்
13. தான்றித் தோட்டம்
14. மாநாட்டு மண்டபம்
15. கண்காட்சிக் கூடங்கள்
16. கறுவாச் செய்கை
17. புனரமைக்கப்படும் துரவு
18. புதிய மூலிகைச் செய்கை
19. பெரிய மூலிகை மரங்களின் பிரதேசம்
20. செவ்வரத்தைத் தோட்டம்
21. கொடித்தோடைத் தோட்டம்
22. கமுகுச் செய்கை
23. வைத்தியர் வீடு



# உள்ளடக்கம்


1. அத்தி
2. அதிமதுரம்
3. அழிஞ்சில்
4. அடம்பு
5. அசோகு
6. அரசு
7. ஆடுதின்னாப்பாலை
8. ஆல்
9. இக்கிரி
10. இம்பூரல்
11. இஞ்சி
12. உத்தமாகாணி
13. உள்ளி
14. எலியாமணக்கு
15. எலுமிச்சை
16. ஒதி
17. கறுப்புமணித்தக்காளி
18. கராம்பு
19. கடுக்காய்
20. கடலிராஞ்சி
21. கடம்பு
22. கரும்பு
23. கருணைக்கிழங்கு
24. கறுத்தப்பூக்கொடி
25. கார்போகரிசி
26. காற்றோட்டி
27. கீழ்காய்நெல்லி
28. குன்றிமணி
29. குப்பைமேனி
30. குப்பிளாய்
31. கொடித்தோடை (பசன்)
32. கொடியார்கூந்தல்
33. கொவ்வை
34. கொய்யா
35. கோடகசாலை
36. கோரை
37. சரக்கொன்றை
38. சாறணை
39. சிவனார்வேம்பு
40. சிறியாள்நங்கை
41. சீரகம்
42. சுரைக்காய்
43. செம்பரத்தை
44. செண்பகம்
45. நஞ்சறுப்பான்
46. நந்தியாவட்டை
47. நன்னாரி
48. நாவல்
49. நீர்முள்ளி
50. தாமரை
51. தாழை
52. தேங்காய்பூக்கீரை
53. பப்பாசி
54. பாதிரி
55. பலாசு
56. பாவட்டை
57. பிரண்டை
58. புங்கு
59. புதினா
60. பூனைக்காலி
61. பேராமட்டி
62. பெருமருந்து
63. பூவரசு
64. மருதோன்றி
65. மகிழ்
66. மருள்
67. மாசிபத்திரி
68. மிளகு
69. முள்ளங்கி
70. முள்முருக்கு
71. முசுட்டை
72. மொசுமொசுக்கை
73. விளாத்தி
74. வெள்ளரிக்காய்
75. வெண் சந்தனம்
76. வெண்கொடிவேலி
77. வெற்றிலை
78. வெள்ளறுகு
79. தேள்கொடுக்கி
80. தேற்றா
81. அம்மான்பச்சரிசி
82. ஓரிதழ் தாமரை
83. ஐம்பு
84. கடுகு
85. கவிழ்தும்பை
86. கிரந்தி நாயகன்
87. சிவகரந்தை
88. சிற்றரத்தை
89. சிற்றம்மான்பச்சரிசி
90. செம்பருத்தி
91. மல்லிகை
92. மா
93. மான்செவிக்கள்ளி
94. முடிதும்பை
95. முள்ளடிநாயகன்
96. நத்தைச்சூரி
97. நிலப்பனங்கிழங்கு
98. புன்னை
99. புளி
100. புளிமதுரை
101. நிலவாகை
102. வெங்காயம்


B.N :- Botanical name
Sin :- Sinhala name
Eng : - English name
P.U:- Part use



## அத்தி

**B.N** :- ***Ficus racemosa L.***

Family :- Moraceae

Sin :- අටටික්කා

Eng :- Cluster fig,Country fig

P.U :- பழம், பால்,
மரப்பட்டை, காய்

பயன் :- அத்திப்பிஞ்சை குடிநீர் செய்து கொடுக்க மூல நோ, மூல எரிவு இரத்த மூலம் என்பன குறையும். அத்திக் காயை சமைத்துண்ண வயிற்றுப்புண், வயிற்றோட்டம் குறையும். அத்திப் பழத்தை உலர்த்திச் சூரணம் செய்து உண்ண இரத்தம் விருத்தியாகும்.



## அதிமதுரம்

**B.N** :- ***Glycyrrhiza glabra***

Family :- Leguminosae

Sin :- වැල්මී

Eng :- Liquorice

P.U :- வேர்

பயன் :- அதிமதுர வேரை வாயிலிட்டு மெல்ல தொண்டைக் கரகரப்பு நீங்கும். குரல் இனிமையாகும்.



## அழிஞ்சில்

**B.N** :- ***Alangium salvifolium***


Family :- Alangiaceae

Sin :- රුක්අඟුණ

Eng :- Sage leave

P.U :- வேர்ப்பட்டை, பட்டை, பழம்

பயன் :- இதன் பட்டையைப் பொடி செய்து சீழ் வடிகின்ற புண், சொறி,சிரங்கு என்பவற்றின் மீது தூவி வர குணமாகும்.



## அடம்பு

***B.N** :- Ipomoea pes-caprae L*

Family :- Convolvulaceae

Sin :- මුහුදු බිංතඹුරු

Eng :- Goats foot creeper

P.U :- இலை

பயன் :- இலைச்சாற்றைக் குடிக்க கொடுக்க சிறுநீரைப்பெருக்கும். மலச்சிக்கிலை நீக்கும்.



## அசோகு

***B.N** :- Saraca indica*

Family :- Fabaceae

Eng :- Ashoka

Sin :- අශෝක

P.U :- பூ, பட்டை

பயன்:- இதன் பட்டையை இடித்துச் சாறு பிழிந்து 2.5-10 மி.லீ வரை கொடுக்க பெரும்பாடு குறையும் .



## அரசு

***B.N** :- Ficus religiosa L*

Family :- Meliaceae

Sin :- බෝ

Eng :- Sacred bo

P.U :- விதை , இலை . பட்டை, வேர்

பயன் :- விதையை பொடி செய்து உட்கொண்டு வர மலச்சிக்கலை நீக்கும். இதன் பட்டை-யைக் குடிநீர் செய்து குடிக்க சொறி. சிரங்கு நீக்கும்.



## ஆடுதின்னாப்பாலை

*B.N :- Aristolochia bracteolate Lam*

Family :- Aristolochlaceae

Sin :- සත්සඳ

P.U :- விதை .வேர் .இலை

பயன் :- இதன் விதைகளைப் பொடித்து 4 கிராம் எடுத்து 30 -60 கிராம் சிற்றாமணக்கு எண்ணெ யில் கலந்து கொடுக்க மாதவிலக்கு தள்ளிப்போவது நிற்கும். ஆடுதின்னாப்பாலைச் சாற்றில் நாவல் விதையை அரைத்து 5 கிராம் கொடுக்க நீரிழிவு கட்டுப்படும்.



## ஆல்

*B.N :- Ficus benghalensis L*

Family :- Moraceae

Sin :- මහ නුග

Eng :- Banyan tree

P. U :- தண்டு .பட்டை. இலை

பயன் :- ஆலம் குச்சியினால் பல்துலக்க பல் இறுகும். இதன் பட்டையைக் குடிநீரிட்டுக் கொடுக்க பெரும்பாடு குறையும்.



## இக்கிரி

*B.N :- Barleria mysorensis*

Family :- Acanthaceae

P. U : - சமூலம்

பயன் :- குழந்தைகளிற்கு ஏற்படும் இருமலிற்கு இதன் சமூலத்துடன் சிறிது மிளகு சேர்த்து குடிநீரிட்டு வடித்து 1 -2 தேக்கரண்டி அளவு கற்கண்டுடன் சேர்த்துக் கொடுக்க குணமாகும்.



## இம்பூரல்

*B.N* :- *Oldenlandia umbellifera*

Family :- Rubiaceae

Sin :- සායමුල්

Eng :- chaya root

P.U :- சமூலம்

பயன் :- இதனை வடகமாகச் செய்து உணவுடன் உட் கொள்ள சுவாச நோய்களைக் குணமாக்கும்.



## இஞ்சி

*B.N* :- *Zingiber officinale*

Family :- Zingiberaceae

Sin :- ඉඟුරු

Eng :- Ginger

P.U :- வேர்த்தண்டுக் கிழங்கு. சாறு

பயன் :- 5 கிராம் இஞ்சி எடுத்து புறத்தோல் சீவி துப்பரவு செய்து பசுப்பால் சிறிது விட்டரைத்து 20 மி.லீ பசுப்பாலில் கலந்து காலை மாலை இரு வேளை குடித்து வர வயிற்றிறுள்ள வாய்வு நீங்கும். இஞ்சியை கீற்றுக்களாகக் கீறி தேனில் நன்றாக ஊறிய பின் தினமும் உண்டு வர நோய் அற்று ஆரோக்கியமாக வாழலாம்.(கல்ப மூலிகை) செரியாக் கழிச்சலுக்கு இஞ்சிச்சாற்றை தொப்பூழைச் சுற்றி தடவ கழிச்சல் நீங்கும்.



## உத்தமாகாணி

*B.N* :- *Pergularia daemia*

Family :- Asclepiadaceae

Sin :- මැඩවෙල

Eng :- Dog's bane white low plant

P.U :- வேர். இலை . வேர்ப்பட்டை

பயன் :- உத்தமாகாணி இலை ஒரு பிடியை பழகிய சட்டியில் இட்டு சிறிது வெதுப்பிச் சாறு பிழிந்து கொடுக்க குழந்தைகளிலுண்டாகும் மாந்தம் நீக்கும்.



## உள்ளி

B.N :- *Allium sativum L*

Family :- Alliaceae

Eng :- Garlic

Sin :- සුදු ළූනු

பயன் :- உள்ளியைத் தணலில் போட்டு சுட்டு உண்டு வர வயிற்றிலுள்ள வாய்வுக் கோளாறுகள் நீங்கும். இரத்தத்திலுள்ள கொலஸ்ரோலின் அளவை குறைக்கும்.



## எலியாமணக்கு

**B.N** :- ***Jatropha glandulifera***

Family :- Euphorbiaceae

Sin :- මිල්ල

Eng :- Physic nut

P.U :- வேர், இலை, தண்டு

பயன் :- இதன் குச்சியினால் பல்துலக்க பல் வலி குறையும். இதன் வேரை குடிநீரிட்டுக் கொடுக்க குழந்தைகளிற்கு உண்டாகும் வயிற்றுப்பொருமல் நீங்கும்.



## எலுமிச்சை

**B.N** :- ***Citrus aruntifolia***

Family :- Rutaceae

Sin :- දෙහි

Eng :- Lime

P.U :- பழம், இலை

பயன் :- இதன் பழம் விற்றமின் C நிறைந்தது. பழரசத்தைக் குடிக்க பித்த வாந்தியை நிறுத்தும்.



## ஓதி

**B.N** :- *Odina woidier*

Family :- Anacardiaceae

Sin :- හික්

Eng :- woidier

P.U :- வேர். இலை. மரப்பட்டை. பிசின்

பயன் :- ஓதியம் பட்டையை குடிநீரிட்டு 15-30 மி.லீ காலை மாலை கொடுக்க பெரும்பாடு நீங்கும். இதன் பட்டையை அல்லது வேர்ப் பட்டையை குடிநீரிட்டு வாய் கொப்பளித்து வர பல்வலி. வாய்ப்புண் நாப்புண் நீங்கும்.



## கறுப்புமணித்தக்காளி

**B.N** :- *Solanum nigrum*

Family :- Solanaceae

Eng :- Black nightshade

Sin :- කලුකැම්බේරිය

P.U :- பழம் . இலை

பயன் :- இதன் பழத்தை உணவில் சேர்க்க வாய்ப்புண். நாக்குசுவையின்மை நீங்கும்.



## கராம்பு

**B.N** :- *Syzygium aramaticum L*

Family :- Myrtaceae

Sin :- කරාබු නැටි

Eng :- Clove

P.U :- மொட்டு

பயன் :- கராம்பை நீர் விட்டரைத்து நெற்றியிலும் மூக்குத் தண்டின் மீதும் பற்றிட தலைப் பாரம் குணமாகும்.



## கடுக்காய்

B.N :- *Terminalia chebula*

Family :- Combretaceae

Sin :- අරළු

Eng :- Chebulic myrobalan

P.U :- இலை , பிஞ்சு

பயன் :- கடுக்காய்த் தோலைப் பொடி செய்து பல் துலக்க ஈறு வலி , ஈற்றிலிருந்து வடியும் இரத்தம் நிற்கும்.



## கடலிராஞ்சி

B.N :- *Salacia reticulata wight*

Family :- Celastraceae

Sin :- කොතල හිඹුටු

P.U :- பட்டை

பயன் :- இதன் பட்டை ஊற வைத்துக் குடிக்க நீரிழிவை கட்டுப்படுத்தும்.



## கடம்பு

B.N :- *Barringtonia acutangula*

Family :- Lecythidaceae

Eng :- Indian oak

Sin :- ඵලමිදෙල්ල

P.U :- பழம். இலை. பட்டை

பயன் :- கடம்பு மரத்தின் புறத்தோலை குடிநீர் செய்து குடிக்க சுரம் நீங்கும்.



## கரும்பு

*B.N* :- *Saccharum officinarum*

Family :- Gramineae

Sin :- උක්

Eng :- Sugar cane

P.U :- தண்டு, வேர்

பயன் :- கரும்பின் வேரை குடிநீர் செய்து கொடுக்க சிறுநீர் எரிச்சலை குறைக்கும்.



## கருணைக்கிழங்கு

*B.N* :- *Amorphophallus campanulatus*

Family :- Araceae

Sin :- කිඩාරම්

Eng :- Elephant's foot

P.U :- கிழங்கு . வேர்

பயன் :- கருணைக்கிழங்கை சமைத்து உண்ண மூல நோய் குணமாகும்.



## கறுத்தப்பூக்கொடி

*B.N* :- *Clitoria ternatea L*

Family :- Fabaceae

Sin :- නිල් කටරොළු

Eng :- Butterfly pea

P.U :- வேர் . இலை

பயன் :- இதன் இலையை அரைத்து தலைக்கு வைத்து முழுகி வர சிறுவர்களில் கிரந்தியை நீக்கும்.



## கார்போகரிசி

B.N :- *Psoralea corylifolia*

Family :- Fabaceae

Sin :- බාකුචි

Eng :- Psoralea seed

P.U :- விதை

பயன் :- கார்போகரிசி விதையை பசுப்பால் விட்டரைத்து பூசி வர தோல்நோய்கள் நீங்கும் .



## காற்றோட்டி

B.N :- *Capparis zeylanica*

Family :- Capparidaceae

Sin :- වැලන්ගිරිය

Eng :- Thorny caper

P.U :- காய் .வேர். இலை .வேர்பட்டை

பயன் :- காற்றோட்டிக் காயை பொரித்து உண்ண வாய்வுத்தொல்லையை நீக்கும்.



## கீழ்காய்நெல்லி

B.N :- *Phyllanthus debilis*

Family :- Euphorbiaceae

Eng :- Indian phyllanthus

Sin :- පිටවක්කා

P.U :- சம்மூலம்

பயன் :- இதன் இலை வேர் முதலியவற்றை அரைத்து பசு மோருடன் அல்லது பசுப் பாலுடன் கலந்து கொடுக்க மஞ்சட் காமாளை நீங்கும்.



## குன்றிமணி

*B.N* :- *Abrus precatorius*

Family :- Leguminaceae

Eng :- Indian liquorice

Sin :- ඔලිඳ

P.U :- இலை. வோ. விதை

பயன் :- இதன் விதையை நன்கு கொதிக்க வைத்து எடுத்து .அரைத்து வீக்கம் .வலி உள்ள இடங்களிற்குப் பூச அவை தணியும்.



## குப்பைமேனி

*B.N* :- *Acalypha indica L*

Family :- Erythroxylaceae

Sin :- කුප්පමේනියා

Eng :- Indian acalypha

P.U :- வேர் .இலை .பூ

பயன் :- இதன் இலையையும் உப்பையும் சேர்த்தரைத்து சொறி சிரங்கிற்கு தேய்த்துக் குளிக்க குணமாகும்.



## குப்பிளாய்

*B.N* :- *Vernonia zeylanica L*

Family :- Compositae

Sin :- පුපුල

P.U :- இலை

பயன்:- இதன் இலையை எலுமிச்சம் பழச்சாற்றுடன் அரைத்துப் பூச சொறி. கரப்பான் நீங்கும்.



## கொடித்தோடை (பசன்)

*B.N* :- *Passiflora caerulea*

Family :- Passifloraceae

Sin :- පැෂන්

Eng :- passion

P.U :- பழம். இலை

Action :- Nutritive

பயன் :- இதன் பழச்சாறு உடலிற்கு ஊட்டத்தை அளிக்கும். இதன் குருத்து இலையை தினம் உணவில் சேர்த்துக் கொண்டால் உயர் குருதி அழுக்கத்தைக் குறைக்கும்.



## கொடியார்கூந்தல்

*B.N* :- *Cuscuta reflexa*

Family :- Convolvulaceae

Sin :- අගමුල නැති වැල්

Eng :- Dodder

P.U :- சமூலம்

பயன் :- சமூலச்சாற்றை விட்டு எண்ணெய் காய்ச்சி தலைக்கு வைத்து வர கூந்தல் நன்கு வளர்ச்சியடையும்.



## கொவ்வை

*B.N* :- *Coccinia grandis(L)*

Family :- Cucurbitaceae

Sin :- කෝවක්කා

Eng :- Ivyground

P.U :- வேர். இலை. பழம். மரப்பட்டை

பயன் :- கொவ்வைக் காயை உட்கொண்டு வர நீரிழிவு கட்டுப்படும்.



## கொய்யா

*B.N* :- *Psidium guajava L*

Family :- Myrtaceae

Sin :- පේර

Eng :- Guava

P.U :- பழம். பிஞ்சு. இலை

பயன் :- பழம் மலத்தை இளக்கும். பற்களிற்கு உறுதி தரும். இரத்த ஓட்டத்தைச் சீராக்கும். பிஞ்சு வயிற்றுப் போக்கு வயிற்றுக் கடுப்பை நீக்கும்.



## கோடகசாலை

*B.N* :- *Rungia repens(L)*

Family :- Acanthaceae

Sin :- සුලුනය්

P.U :- சமூலம்

பயன் :- இதன் சமூலத்தை அரைத்துப் பூச சிறுவர்களில் ஏற்படும் தோல் நோய்களை குணமாக்கும்.



## கோரை

*B.N* :- *Cyperus rotundus L*

Family :- Cyperaceae

Sin :- කලාඳුරු

Eng :- Nut grass

P.U :- வேர்த்தண்டுக் கிழங்கு

பயன் :- கிழங்கைக் குடிநீரிட்டுக் கொடுக்க சுரம் தணியும்.



## சரக்கொன்றை

B.N :- *Cassia fistula L*

Family :- Fabaceae

Sin :- ඇහැළ

Eng :- Indian laburum

P.U :- இலை

பயன் :- இதன் தளிர் இலையை எலுமிச்சம் பழச்சாற்றுடன் அரைத்துப் பூச தேமல், படர் தாமரை நீங்கும்.



## சாறணை

B.N :- *Trianthema portulacastrum*

Family :- Aizoaceae

Sin :- සාරණ

Eng :- Horse purslane

P.U :- இலை .வேர்

பயன் :- இதன் வேரை குடிநீரிட்டுக் கொடுக்க சிறுநீரைப்பெருக்கும் சிறுநீர்க்கட்டு. சிறுநீர் எரிச்சலை நீக்கும்.



## சிவனார்வேம்பு

B.N :- *Indigofera aspalathoides*

Family :- Fabaceae

Sin :- රතු කොහොඹ

P.U :- வேர்

பயன் :- சிவனார்வேம்பின் வேரை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி பூச நாற்பட்ட புண். சொறி. சிரங்கு குணமாகும்.



## சிறியாள்நங்கை

B.N :- *Polygala glabra*

Family :- Acanthaceae

Sin :- හිං බිංකොහොඹ

Eng :- green chireta

P.U :- இலை

பயன் :- பாம்புக்கடிக்கு இதன் இலையை கைப்பு சுவை தோன்றும் வரை சப்பி உண்ணும்படி கொடுத்து வர கடிவிடம் நீங்கும்.



## சீரகம்

B.N :- *Cuminum cyminum L*

Family :- Apiaceae

Eng :- cummin

Sin :- සූදුරු

P.U :- பழம், விதை

பயன் :- சீரகம் ஊறிய நீரைக் காலையில் வெறும் வயிற்றில் குடித்து வர குடல் புண்ணை ஆற்றும். உடலிற்குக் குளிர்ச்சியை உண்டாக்கும். இரும்புச்சத்து உள்ளது.



## சுரைக்காய்

B.N :- *Lagenaria siceraria*

Family :- Cucubitaceae

Sin :- දියලබු

Eng :- Bottle gourd

P.U :- காய்

பயன் :- சுரைக்காயைச் சமைத்துண்ண சிறுநீர் தாராளமாக வெளியேறும். உடலிற்குக் குளிர்ச்சியை உண்டாக்கும். இதயத்தைப் பலப்படுத்தும்.



## செம்பரத்தை

*B.N* :- *Hibiscus rosa -sinensis*

Family :- Malvaceae

Sin :- වද්පෑතු මල්

Eng :- Shoe flower

P.U :- இலை, பூ, வேர்

பயன் :- செம்பரத்தை பூவின் சாற்றுக்கு தேங்காயெண்ணெய் சேர்த்து காய்ச்சி தலையில் தடவி வர தலைமுடி கறுத்துக் செழிமையாக வளரும். செம்பரத்தை பூவை சம்பலிட்டு உண்ண உடலிற்கு குளிர்ச்சியளிக்கும்.



## செண்பகம்

*B.N* :- *Michelia champeca L*

Family :- Magnoliaceae

Sin :- සපු

Eng :- Champak

P.U :- பூ, வேர், இலை, பழம், வேர்ப்பட்டை, மரப்பட்டை

பயன் :- பூவைக் குடிநீரிட்டு கொடுக்க காய்ச்சல், ஓங்களம் தீரும்.



## நஞ்சறுப்பான்

*B.N* :- *Tylophora indica*

Family :- Asclepiadaceae

Sin :- බිංනුග

Eng :- Emetic swallow wort

P.U :- சமூலம்(முழுத்தாவரம்), இலை .வேர்

பயன் :- நஞ்சறுப்பான் வேரை குடிநீரிட்டுக் குடிக்க இருமல், முட்டு போன்ற சுவாசநோய்கள் விசக்கடி நீங்கும்.



## நந்தியாவட்டை

*B.N* :- *Pagiantha dichotoma*

Family :- Apocynaceae

Sin :- දිවි කඳුරු

Eng :- Poison nut

P.U :- பால், பூ,வேர்

பயன் :- பாலினை எடுத்து எண்ணெய் விட்டு நன்றாக கலந்து நெற்றியில் தேய்க்க கண் வலி நீங்கும். பாலினை வெட்டுக் காயங்களின் மீது பூச சீழ் பிடியாது புண் எளிதில் மாறும். வேரை எடுத்து வாயிலிட்டு மென்றால் பல் வலி நீங்கும்.



## நன்னாரி

*B.N* :- *Hemidesmus indicus (L)*

Family :- periplocaceae

Sin :- ඉරමුසු

Eng :- Indian sarasaparilla

P. U :- வேர்

பயன் :- இதன் வேரை அவித்துக் குடிக்க உடலில் ஏற்படும் வியர்வை நாற்றம் நீங்கும். உடல் வன்மை அடையும். இதன் வேரை தூளாக்கி பசுவின் பாலுடன் சேர்த்து பருக உடல் சூட்டைத் தணிக்கும். சிறுநீர் எரிவை நீக்கும்.

## நாவல்



*B.N* :- *Eugenia jambolana or syzygium cumini*

Family :- Myrtaceae

Sin :- මදං

Eng :- Jambol

P.U :- பட்டை, இலை, பழம், உலர்ந்த விதை

பயன் :- நாவல் விதையை பொடி செய்து வேளைக்கு 2- 4 கிராம் கொடுக்க நீரிழிவு கட்டுப்படும். பட்டையை குடிநீரிட்டு வாய் கொப்பளித்து வர வாய்ப்புண் ஆறும்.



## நீர்முள்ளி

*B.N* :- *Asteracantha longifolia*

Family :- Acanthaceae

Sin :- නිරමුල්ලිය

Eng :- Long leaved barleria

P.U :- சமூலம். விதை

பயன் :- இதன் விதையை பாலில் ஊற வைத்து சர்க்கரை கலந்து கொடுக்க ஆண்மை பெருகும். சமூலத்தை அவித்துக் குடிக்க சிறுநீர்எரிவு, நீரடைப்பு நீங்கும்.



## தாமரை

*B.N* :- *Nelumbo nucifera*

Family :- Nymphaeaceae

Sin :- නෙළුම්

Eng :- lotus

P.U :- இலை, பூ, தண்டு

பயன் :- இதன் கிழங்கை சமைத்து உண்ண வயிற்றுக்கடுப்பு, சொறி, இருமல் நீங்கும்.



## தாழை

*B.N* :- *Pandanus tectorius*

Family :- Pandanaceae

Sin :- වැටකේ

Eng :- Screw pine

P.U :- காய ,பூ ,விழுது

பயன் :- தாழங்காயைப் பிழிந்த சாற்றை எண்ணெயில் விட்டுக் காய்ச்சி வாத நோய்களிற்குப் போட அவை குணமாகும்.



## தேங்காய்பூக்கீரை

*B.N* :- *Aerva lanata L*

Family :- Amaranthaceae

Sin :- පොල්පලා

Eng :- Common wayside weed

P.U :- சமூலம் (முழுத்தாவரம்)

பயன் :- இதன் சமூலத்தை குடிநீரிட்டுக் குடிக்க சிறுநீரகக் கல். சிறுநீரககட்டு. சிறுநீர எரிச்சலை நீக்கும். தொடர்ச்சியாகக் குடிக்கக் கூடாது.



## பப்பாசி

*B.N* :- *Carica papaya*

Sin :- පැපොල්

Eng :- Papaw

Family :- Caricaceae

P.U :- பழம் . காய்

பயன்:- பப்பாசிப் பழத்தை தினமும் உண்டு வந்தால் நன்றாக மலம் கழியும்.காயை தோல் நீக்கி சமைத்து உண்டு வந்தால் தாய்ப்பால் பெருகும்.



## பாதிரி

*B.N* :- *Stereospermum suaveolens*

Family :- Bignoniaceae

Sin :- පලොල්

Eng :- Trumpet flower

P.U :- வேர்

பயன் :- இதன் வேரைக் குடிநீரிட்டுக் கொடுக்க சொறி. சிரங்கு குணமாகும்.



## பலாசு

*B.N :- Butea monosperma (Lam)*

Family :- Fabaceae

Sin :- ශී කැල

Eng :- flame of the forest

பயன் :- இதனைத் தண்ணீரில் ஊற வைத்து . மேல் தோலை நீக்கிய பின் உட் பருப்பைப் பொடித்து 260 மி.கி வீதம் தேனில் கலந்து தினம் மூன்று வேளை மூன்று நாட்களிற்குக் கொடுத்து நான்காம் நாள் சிற்றாமணக்கெண்ணெய் ஒரு அவுன்ஸ் குடிக்க. மலத்துடன் குடற்புழுக்கள் வெளியேறும்.



## பாவட்டை

*B.N :- Pavetta indica*

Family :- Rubiaceae

Eng :- Indian peller shrub

Sin :- පාවට්ට

P.U :- இலை காய் வேர்

பயன் :- பாவட்டை இலையை முறைப்படி குடிநீரிட்டுக் குடிக்க இருமல். சுரம் நீங்கும்.



## பிரண்டை

*B.N :- Cissus quadrangularis*

Family :- Vitaceae

Eng :- Adamant creeper

Sin :- හිරැස්ස

P.U :- தண்டு . வேர்

பயன் :- பிரண்டையை வடகமாகச் செய்து உணவுடன் உட் கொள்ள செரியாமை வயிற்றுப் புண்களை குணமாக்கும்.



## புங்கு

*B.N* :- *Calophyllum tomentosum*

Family :- Clusiaceae

Eng :- Indian beech

Sin :- කීන

P.U :- வேர். இலை. பூ. விதை

பயன் :- புங்கம் வேரை பட்டையை நீக்கி மெல்லியதாகச் சீவி பால் பிழிந்து அதே அளவு தேங்காய்ப் பால் சேர்த்து காய்ச்சி ஆறாத புண்களிற்குப் போட்டு வர அவை விரைவில் ஆறும்.



## புதினா

*B.N* :- *Mentha arvensis*

Family :- Lamiaceae

Sin :- ඔඩුතාලං

Eng :- Horse mint

P.U :- இலை

பயன் :- இதனை நன்கு அரைத்து நீரில் கலந்து உட் கொள்ள பசி உண்டாகும்.



## பூனைக்காலி

*B.N* :- *Mucuna prurita*

Family :- Leguminosae

Sin :- වඳුරු මෑ

Eng :- Cow hage

P.U :- விதை

பயன் :-இதன் விதையைப் பொடித்து 500- 1000 மி.கி பசுப்பாலில் கலந்து கொடுக்க ஆண்மை பெருகும்.



## பேராமட்டி

*B.N* :- *Pavonia odorata willd*

Family :- Malvaceae

Sin :- සුවඳ බැබිල

P.U :- வேர்

பயன் :- இதன் வேரைக் குடிநீரிட்டுக் குடிக்க உடலைப் பலப்படுத்தும். வாதநோயை கட்டு-ப்படுத்தும்.



## பூவரசு

*B.N* :- *Thespesia populnea (L)*

Family :- Malvaceae

Sin :- ගංසූරිය

Eng :- Indian tulip tree

P.U :- பட்டை

பயன் :- இதன் பூவை அரைத்து சிரங்குகளின் மீது பூசி வர குணமாகும்.



## பெருமருந்து

*B.N* :- *Aristolochia indica*

Family :- Aristolochiaceae

Sin :- සස්සඳ

Eng :- Indian birth wort

P.U :- வோ . இலை

பயன்:- வேரைக் குடிநீரிட்டுக் குடிக்க பாம்பு விசத்தை நீக்கும்.



## மருதோன்றி

B.N :- *Lawsonia alba*

Family :- Lythraceae

Sin :- මරතෝංඩි

Eng :- Henna

P.U :- இலை, பூ, பட்டை ,விதை

பயன் :- மருதோன்றி இலையை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து இரு பாதங்களிலும் பூசி வர நீரிழிவு நோயில் ஏற்படும் பாத எரிவு நீங்கும் .
இதன் இலையை அரைத்துப் நெற்றியில் பற்றிட தலைவலி தீரும்.



## மகிழ்

B.N :- *Mimosops elengi L*

Family :- Sapotaceae

Sin :- මුණමල්

Eng :- Butter wood tree

P.U :- பூ

பயன்:- பூவை முகர சுவையின்மை நீங்கும். பூவை உலர்த்தி பொடி செய்து நுகர தலை வலி குணமாகும்.



## மருள்

B.N :- *Sansevieria zeylanica*

Family :- Liliacea

Sin :- මුරුවා

Eng :- Bow – String Hemp

P.U :- வேர்த்தண்டுக் கிழங்கு

பயன் :- கிழங்கைக் குடிநீரிட்டுக் குடிக்க சிரங்கு .சுரம் நீங்கும்.
இதன் சாற்றை சிறு குழந்தைகளிற்குக் கொடுக்க சளி நீங்கும்.



## மாசிபத்திரி

B.N :- *Artemisia vulgaris*

Family :- Compositae

Sin :- වල් කොලන්ද

Eng :- Indian worm wood

P.U :- வேர்

பயன் :- இதன் இலையைப் உலர்த்திப் பொடித்துப் புண்ணுக்குப் போட. புண் ஆறும்.



## மிளகு

B.N :- *Piper nigrum*

Family :- Piperaceae

Sin :- ගම්මිරිස්

Eng :- Black pepper

P.U :- உலர்ந்த கனி .வேர்

மிளகு தூள் வேளைக்கு 2-4 கிராம் அளவில் உட்கொள்ள பசியைத் தூண்டும்.



## முள்ளங்கி

B.N :- *Raphanus sativus*

Family :- Cruciferae

Sin :- රාබු

Eng :- Radish

P.U :- கிழங்கு

பயன் :- கிழங்கைச் சமைத்துண்ண சுவையின்மையை நீக்கி பசியை உண்டாக்கும். உணவைச் செரிப்பிக்கும்.சிறுநீரை நன்கு வெளியேற்றும்.



## முள்முருக்கு

**B.N** :- *Erythrina indica*

Family :- Fabaceae

Sin :- එරබදු

Eng :- Indian coral tree

P.U :- இலை, பூ

பயன் :- இதன் இலைச்சாறு 50 மி.லீ 40 நாட்கள் குடித்து வர பெண்களில் குழந்தையின்மையை நீக்கும்.
இதன் இலையை அரைத்து தலைக்கு வைத்து முழுகி வர சிறுவர்களில் கிரந்தியை நீக்கும்.



## முசுட்டை

**B.N** :- *Rivea ornate*

Family :- Convolvulaceae

P.U :- இலை

பயன்: - இதன் இலையை அரைத்து எண்ணெய் விட்டுக் காய்ச்சி சொறி, சிரங்கிற்குப் போட்டு வர குறைவடையும். இலையை சமைத்து உண்ண மலம் கழியும். இரும்புச் சத்துக் கொண்டது.



## மொசுமொசுக்கை

**B.N** :- *Mukia maderaspatana(L)*

Family :- Cucurbitaceae

Sin :- ලේන් කැකිරි

Eng :- Roughbryony

P.U :- இலை, விதை, வேர்

பயன் :- இதன் இலையை சம்பலாக்கி உண்ண இருமல், சளி குணமாகும்.



## விளாத்தி

B.N :- *Feronia limonia*

Family :- Rutaceae

Sin :- දිවුල්

Eng :- Wood Apple

P.U :- பழம்

பயன் :- பழத்தை உண்ண மலத்தை இளக்கும். ஆண்மையைப் பெருக்கும். இரும்புச் சத்துக் கொண்டது.



## வெள்ளரிக்காய்

B.N :- *Cucumis Sativus L*

Family :- Cucurbitaceae

Sin :- පිපිඤ්ඤා

Eng :- Common cucumber

P.U :- பழம், காய், விதை

பயன் :- விதையை குடிநீரிட்டுக் குடிக்க சிறுநீரைப் பெருக்கும். பழம் உடலுக்கு குளிர்ச்சி தரும்.



## வெண் சந்தனம்

B.N :- *Santalum album*

Family :- santalaceae

Sin :- සුදු හඳුං

Eng :- sandal wood

P.U :- கட்டை , கட்டைத்தூள்

பயன் :- சந்தனத்தை பசும் பால் விட்டரைத்து முகப்பருவிற்குப் போட அவை நீங்கும். வெண் சந்தனக் கட்டையை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து தேமலிற்குப் பூசி வர குணமாகும்.



## வெண்கொடிவேலி

*B.N* :- *Plumbago zeylanica L*

Family :– Plumbaginaceae

Eng :– lead wort root

Sin :- එලනිටුල්

P.U :- இலை. வேர்ப்பட்டை

பயன் :- இதன் வேரை அரைத்து மேற்பூச்சாகப் பூச குட்டம் குணமாகும்.



## வெற்றிலை

*B.N* :- *Piper betle*

Family :- Piperaceae

Sin :- බුලත්

Eng :- Betel vine

P.U :- இலை .காம்பு

பயன் :- இலையை உட்கொண்டு வர நீரிழிவு நோய் கட்டுப்படும்.



## வெள்ளறுகு

*B.N* :- *Adenema hissopifolia*

Family :– Gramineae

P.U :- வேர்.சமூலம்

பயன் :- வெள்ளறுகைக் குடிநீரிட்டு வடித்து சிறிது பசு வெண்ணெய் சேர்த்து கொடுக்க வெள்ளை படல் குணமாகும். வாத நோய்களில் பயன்படும்.



## தேள்கொடுக்கி

B.N :- *Heliotropium indicum*

Family :- Boraginaceae

Sin :- ඇත්සොඬ

Eng :- Heliotrope

P.U :- இலை

பயன் :- இதன் இலையை அரைத்துப் பூச சொறி ,சிரங்கு குணமாகும்.



## தேற்றா

B.N : – *Strychnos potatorium*

Family :- Loganiaceae

Eng :- Clearing nut

Sin :- ඉඟිනි

P.U :- பழம். விதை

பயன் :- தேற்றா விதையை நீரில் போட்டு வைத்தால் நீர் சுத்தமாகும்.
தேற்றா விதையை பொடித்து பாலில் கலந்து குடிக்கக் கொடுக்க நீரிழிவு கட்டுப்படும்.
சிறுநீர் எரிச்சல் தீரும்.



## அம்மான்பச்சரிசி

B.N :- *Euphorbia hirta L*

Family :- Euphorbiaceae

Sin :- දදකිරිය

Eng :- Snake weed

P.U :- சமூலம்

பயன் :- இதன் சமூலத்தை அரைத்து பாலுடன் குடித்து வர உடம்பு நோவை நீக்கும். இதன் பாலை போட்டு வர பாலுண்ணியை நீக்கும்.



## ஓரிதழ் தாமரை

B.N :- *Hybanthus enneaspermus*

Eng :- Charati

Family :- Violaceae

P.U :- சமூலம்

பயன் :- இதனைக் காயகற்ப முறைப்படி உண்டு வர உடலை வலுக்கச் செய்யும். ஆண்மையை பெருக்கும். இதனை அரைத்து தேசிக்காயளவு பசுமோரிலிட்டு கலக்கி தினம் இருவேளை 40 நாட்கள் கொடுத்து வர பால் சுரப்பு குறைவானவர்களுக்கும் பால் சுரக்கும்.



## ஜம்பு

B.N :- *Syzygium aramaticum (L)*

Family :- Myrtaceae

Sin :- මදං

Eng :- Java plum

P.U :- காய் .பட்டை

பயன் :- காயை உண்ண தாகம் தணியும். நீரிழிவு நோயாளிகளிற்குச் சிறந்தது. பட்டையை முறைப்படி குடிநீரிட்டுக் குடிக்க பெரும்பாடு குறையும்.



## கடுகு

B.N :- *Brassica integrifolia*

Family :- Crucifarae

Sin :- අබ

Eng :- Black mustard

P.U :- விதை

பயன் :- கடுகையும் முருங்கம் பட்டையையும் நன்றாக அரைத்து முழங்கால் வலி. கணுக்கால் வலி . வீக்கம் இவற்றிற்குப் பற்றுப் போட அவை குணமாகும்.



## கவிழ்தும்பை

*B.N* :- *Trichodesma indicum*

Family :- Boranginaceae

P.U :- வேர். இலை

பயன் :- இதன் வேரை இடித்துப் பசையாக்கி மூட்டுக்களிலுள்ள வீக்கங்களின் மேல் பூச வீக்கம் வற்றும்.



## கிரந்தி நாயகன்

*B.N* :- *Ruellia tuberosa*

Family :- Acanthaceae

P.U :- சம்மூலம்

பயன் :- இதனை எலுமிச்சம் பழச்சாற்றுடன் அரைத்துப் பூச சொறி. கரப்பான் நீங்கும்.



## சிவகரந்தை

*B.N :-sphaeranthus amaranthoides*

Family :- Compositae

Eng :- Indian globe flower

P.U :- இலை

பயன்:- இதன் இலையை உலர்த்தி பொடித்து 4- 8 கிராம் வரை வெண்ணெய் சேர்த்துக் கொடுக்க காசம் தீரும்.



## சிற்றரத்தை

*B.N* :- *Alpinia officinaram*

Family :- Zingiberaceae

Eng :- Lesser galangal

Sin :- අරත්ත

பயன்:- ஒரு துண்டு சிற்றரத்தையை வாயிலிட்டு சுவைத்து வர தொண்டைக் கட்டு . இருமல் . வாந்தி குறையும்.



## சிற்றம்மான்பச்சரிசி

**B.N** :- ***Euphorbia thymifolia***

Family :- Euphorbiacea

Sin :- බිංදුදකිරිය

பயன் :- இதன் பாலை எடுத்து உதடு. நா வெடிப்புகளிற்குத் தடவி வர மாற்றும்.



## செம்பருத்தி

*B.N* :- *Gossypium arboreum*

Family :- Malveceae

sin :- කපු

Eng :- Cotton

P.U :- பூ .இலை. வேர்

பயன் :- இதன் இலைச்சாற்றை அல்லது குடிநீரை அருந்தி வர உடற் சூடு நீங்கும்.



## மல்லிகை

*B.N :- Jasminum sambac*

Family :- Oleaceae

Sin :- ගැට පිච්ච

Eng :- Needle flower jasmine

P.U :- பூ, இலை

பயன் :- இதன் பூவை மார்பில் வைத்துக் கட்ட பால் சுரப்பது குறையும்.



## மா

***B.N :- Mangifera indica L***

Family :- Anacardiaceae

Sin :- අඹ

Eng :- Mango

P.U :- பழம் , பட்டை , விதைப் பருப்பு

பயன் :- பழம் உடலை தேற்றும் . உடலிற்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். மாம் பட்டைச் சாறு எடுத்து அருந்தக் கொடுக்கபெரும்பாடு நீங்கும். மாங் கொட்டைப் பருப்பைக் கொண்டு தயாரிக்கும் மருந்துகளினால் சீதக் கழிச்சல்.குருதிக் கழிச்சல் நீங்கும்.



## மான்செவிக்கள்ளி

***B.N :- Euphorbia neriifolia***

Family :- Euphorbiaceae

Eng :- Deer's ear spurge

Sin :- පතොක්

P.U :- பால்

பயன் :- இதன் பாலை கட்டிகள் மீது விட்டு வர கட்டிகள் பழுத்து உடையும்.



## முடிதும்பை

*B.N* :- *Leucas zeylanica*

Family :- Labiatae

Sin :- ගැටතුඹ

P.U :- இலை . வேர்

பயன் :- இதனை எலுமிச்சம் பழச்சாற்றுடன் சேர்த்து அரைத்து நீர்ச்சிரங்கிற்குப் பூசி வர குணமாகும்.



## முள்ளடிநாயகன்

*B.N* :- *Vitis pedata*

Family :- Vitaceae

Sin :- වැඩියවෙල්

Eng :- Pedata sevenleaved vina

P.U :- கிழங்கு

பயன் :- முள் தைத்த இடத்தில் முள் வெளிப்படாது விடின் இதன் கிழங்கை வைத்துக் கட்ட முள்ளை வெளியேற்றும்.



## நத்தைச்சூரி

*B.N* :- *Borreria hispida linn*

Family :- Rubiaceae

Eng :- Shaggy button weed

Sin :- කෙත්කැටකොල

P.U :- சம்மூலம்

பயன் :- இதனை கோப்பியுடன் சேர்த்துப் பொடி செய்து குடிக்க உடலைத் தேற்றும்.



## நிலப்பனங்கிழங்கு

*B.N :- Asparagus adscendens*

Family :- Liliaceae

Eng :- Black musale

Sin :- සිං බිංතල්

பயன் :- பாலில் அவித்துக் காய வைத்த கிழங்கை. பொடி செய்து உட் கொள்ள நீரிழிவு நோயில் உண்டான அழல் வாதம் குணமாகும்.



## புன்னை

*B.N :- Calophyllum inophyllum*

Family :- Clusiaceae

Sin :- දෙඹ

Eng :- Alexandrian laurel

P.U :- விதை

பயன்:- புன்னை. ஆமணக்கு. வேம்பு இவற்றின் விதைகளை இடித்து அவியில் அவித்து அடிபட்ட இடங்களிற்கு ஒத்தடமிட்டு வைத்துக் கட்ட அவை குணமாகும்.



## புளி

*B.N :- Tamarindus indica L*

Family :- Fabaceae

Eng :- Tamarind tree

Sin :- සියඹලා

P.U :- இலை

பயன் :- இதன் இலை அவித்த நீரினால் கழுவ தோல் நோய்களில் ஏற்படும் சொறிவு குறையும்.



## புளிமதுரை

*B.N :- Hibiscus cannabinus Linn*

Family :- Malvaceaeae

Eng :- Deccan hempe

P.U :- இலை

பயன் :- இதன் இலையை வறையாகச் செய்து உண்டு வர இரத்தம் விருத்தியாகும்.மல-த்தை நன்கு வெளியேற்றும்.



## நிலவாகை

*B.N :-Cassia senna*

Family:- Fabaceae

Sin :- සෙනෙහෙකොළ

Eng :- Indian senna

P.U :- இலை

பயன் :- இலையை உலர வைத்துப் பொடித்து 1-2 கிராம் வரை இரவில் ஒரு நேரம் கொடுக்க காலை மலம் கழியும்.



## வெங்காயம்

*B.N :–Allium cepa*

Family:–Amaryllidaceae

Eng:–Red onion

பயன் :- புளியமிலையுடன் வெங்காயத்தைச் சேர்த்து அவித்த குடிநீரைப் பருகி வர கொள்ளிக் கரப்பன்(Urticaria) நீங்கும்.

பீம்

The Wisdom of Nature

බීම්

The Wisdom of Nature

BEAM

The Wisdom of Nature









Printed by : Andra Printers - 021 221 7279